01.04.2024



**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.**

**அசல் வழக்கு எண்.137/2017**

**வா.சா. 1–சரோஜா, க/பெ. மாணிக்கம்**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

09. ரெங்கராஜ் நாயுடுவுக்கும், அழகிரிசாமி நாயுடுவுக்கும் பிரிந்த சொத்துக்களை பொறுத்து தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் இல்லை, என்னுடைய அனுபவ அடிப்படையில் உள்ள சொத்துக்களை பிரதிவாதி இடைஞ்சல் செய்ததால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். ராமசாமி வாங்கிய சொத்துக்கு மட்டும் தான் நான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன். ராமசாமி தான் தாவா சொத்தை கிரையம் வாங்கினார் என்று வழககுரையில் சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லவில்லை. அழகிரிசாமியும், ரெங்கராஜ்–வும் எந்தவித ஆவணமும் எழுதிவைக்காமல் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். என் மாமனார் அழகிரிசாமிக்கு என் கணவரும் ஒரு வாரிசு என்றால் சரிதான். உங்கள் கணவர் பெயரிலும், ரெங்கராஜ்வின் மகன் சந்திரசேகரன் பெயரிலும் அவர்களுக்கு பிரிந்த சொத்தை பொறுத்து கூட்டுப்பட்டா வழங்கினார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 30.06.2017 ம் தேதியில் துறையூர், மண்டல துணை

வட்டாட்சியர் அவர்களால் புதிய சர்வே எண்.105, பழைய சர்வே எண்.357/289 சொத்திற்கு பட்டா எண்.1473 வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

10. சந்திரசேகரனுக்கும், உங்கள் கணவருக்கும் கூட்டுப்பட்டா ஏற்பட்டுள்ள போது எந்த வகையில் 1 முதல் 3 வாதிகள் பெயரில் எவ்வகையில் பட்டா மாற்றப்பட்டது என்றால் என் கணவர் மாணிக்கத்தின் வாரிசு அடிப்படையில் பட்டா மாற்றப்பட்டது. வா.சா.ஆ.1ன்படி அழகிரிசாமி மகன் மாணிக்கத்திற்கு பட்டா எண்.1473 என்று தனிவட்டாட்சியரால் வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்கு படிக்க தெரியாது என்று சாட்சி கூறுகிறார். 2017ம் வருடம் சந்திரசேகரன் பெயரிலும், உங்கள் கணவர் பெயரிலும் கூட்டுப்பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

11. வா.சா.ஆ.2 ஆவணமானது ஏற்கனவே மாணிக்கம் மற்றும் சந்திரசேகரனுக்கு கூட்டுப்பட்டா ஏற்பட்டுள்ள நிலையில், மோசடியாக வாதிகளாகிய உங்கள் மூன்று பேருக்கு மட்டும் ஏற்பட்ட பட்டா என்றால் சரியல்ல. 07.02.2017ம் தேதி நீங்கள் ஜெயராஜ் மனைவி அம்பிகாவிடம் தாவா சொத்தை ஈட்டுக்கடன் வைத்துள்ளீர்கள் என்றால் ஆமாம். எங்கள் பெயரில் ஏற்பட்டுள்ள பட்டாவை வைத்து தான்

ஈட்டுக்கடன் வாங்கினோம். அம்பிகாவிடம் ஈட்டுக்கடன் வைத்த ஆவணத்தில் என்ன நான்கெல்லை குறிப்பிட்டு எழுதிக்கொடுத்தீர்கள் என்றால் நான்கெல்லை குறிப்பிடாமல் தான் எழுதிக்கொடுத்தோம். நீங்கள் நான்கெல்லை குறிப்பிட்டு தான் எழுதிக்கொடுத்தீர்கள் என்று சொன்னால் எனக்கு தெரியாது என்று சாட்சி கூறுகிறார். ஈட்டுக்கடன் பத்திரத்தில் உங்களுடைய மாமனார் சொத்தையும், மாமனாரின் உடன்பிறந்த சகோதரரான ரெங்கராஜ் என்பவரின் சொத்தையும் காண்பித்து எழுதிக்கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல, என் பட்டாவை வைத்து தான் எழுதிக்கொடுத்தேன்.

12. ஈட்டுக்கடன் பொறுத்தவரை ரெங்கராஜ் மகனான சந்திரசேகரனை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் அவர் கையொப்பம் செய்யவில்லை, சந்திரசேகரனின் கையொப்பமும் வாங்கவில்லை. அந்த ஈட்டுக்கடன் பதிவு செய்யப்பட்டதாகும். சந்திரசேகரனின் பங்கை நீங்கள் ஈட்டுக்கடன் வைக்க உங்களுக்கு அதிகாரமில்லை என்று சொன்னால் சரியல்ல. சந்திரசேகரனை பொறுத்து ஈட்டுக்கடன் பத்திரம் செல்லாது என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் குடியிருக்கும் வீட்டிற்கு கீழ்புறத்தில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் தனலெட்சுமியின் வீடு உள்ளது. அதன் சர்வே எண் எனக்கு தெரியாது. உங்கள்

சொத்திற்கு கீழ்புறம் உள்ள சொத்தை பிரதிவாதி கிரையம் வாங்கினாரா என்றால் ஆமாம். ரெங்கராஜூவிடன் பிரதிவாதிகள் கிரையம் வாங்கவில்லை, தனலெட்சுமியிடம் தான் கிரையம் வாங்கினார் என்றால் சரியில்ல.

13. தனலெட்சுமியின் கணவர் ராஜேந்திரனிடமிருந்து கிரையம் வாங்கிய இடத்தில் சர்வே எண்.106 என்று சொன்னால் சரியல்ல. தனலெட்சுமியின் கணவர் ராஜேந்திரனிடம் பிரதிவாதி வாங்கிய சொத்திற்கும், தாவா சொத்திற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. உங்களுடைய பிரமாண வாக்குமூலத்தில் சர்வே எண்.106 க்கும், தாவா சொத்திற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி சர்வே 106 ஐ பொறுத்து போலியாக கிரையாவணம் ஏற்படுத்தி வாங்கியுள்ளதாக உங்கள் வழக்குரையில் சொல்லியுள்ளீர்கள் என்றால் ஆமாம். உங்கள் சொத்திற்கு கிழக்கே, மேற்கே உள்ள சொத்துக்களை பிரதிவாதி பானுமதி கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான்.

14. உங்கள் கணவருக்கு பிரிந்த சொத்தை பிரதிவாதி விலைக்கு கேட்டாரா என்றால் ஆரம்பத்தில் கேட்டார். நீங்கள் பொய்யாக சொல்கிறீர்கள், சந்திரசேரகனுக்கு பிரிந்த சொத்தை அவர் மற்றும் மைனர் குழந்தைகளை கட்டுப்படுத்தி அவரிடம் விலைக்கு விலைக்கு கேட்டு, பின்பு 05.07.2017 ம் தேதி கிரையம் வாங்கியுள்ளார் என்றால்

சரியல்ல. ஒருபோதும் உங்களுக்கு பிரிந்த சொத்தை பிரதிவாதி கிரையம் வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ரெங்கராஜ் மகன் சந்திரசேகரன் சரியாக நான்கெல்லை குறிப்பிட்டு பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

15. பிரதிவாதி சர்வேயர் வைத்து சுவாதீனம் எடுக்கும் போது நீங்கள் தான் பிரச்சனை செய்தீர்கள் என்றால் சரியல்ல. வில்லங்க சான்றிதழ் போட்டு பார்த்த போது தான் பிரதிவாதி கிரையம் வாங்கிய விவரம் தெரிந்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நீங்களே ஓட்டை பிரித்து, பிரதிவாதியிடம் தகராறு செய்து, போலீசாரிடம் புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. சந்திரசேகரனிடம் கிரையம் பெற்ற சொத்தை தான் வாதி அனுபவம் செய்து வருகிறார்கள், நீங்கள் பொய் மோசடியாக வழக்குரை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் சொத்து உங்களுக்கு உரிமையுள்ளது என்றால் விளம்புகை பரிகாரம் தான் கேட்டிருக்க வேண்டும், அவ்வாறு கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதி தாவா சொத்திற்கு மேல்புறத்திலும் மற்றும் உங்கள் கணவருக்கு பிரிந்த சொத்திற்கு கீழ்புறத்திலும் கிரையம் பெற்றுள்ளார்கள், உங்கள் ஒருபோதும் இடைஞ்சல் செய்யவில்லை

என்றால் சரியல்ல. ரெங்கராஜ்க்கு பிரிந்த சொத்தினை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

16. அசல் வழக்கு எண்.71/1985 வழக்கிற்கு பிறகு ராமசாமி சொத்து அவருடைய சகோதரர்களான அழகிரிசாமி, ரெங்கராஜ் ஆகியோர்கள் சரிசமமாக பிரித்து கொள்ள தீர்ப்பானது என்றும், அதன்படி கிழமேல் 7 அடியும், தென்வடல் 30 அடி நீளத்திற்கு மேல்புறம் ரெங்கராஜ்வுக்கும், கீழ்புறம் அழகிரிசாமிக்கும் வாய்க்காரராக பாகம் பிரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. ரெங்கராஜ் பாகத்தினை பிரதிவாதி கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. பங்கே பிரிக்கப்படவில்லை என்று சாட்சி கூறுகிறார். பிரதிவாதி சந்திரசேகரன் பங்கை தான் கிரையம் வாங்கி அனுபவம் செய்வதை நீங்கள் தான் இடைஞ்சல் செய்கிறீர்கள் என்றால் சரியல்ல.

17. பிரதிவாதி அவர் கிரையம் பெற்ற சொத்தை அளந்து அத்து காண்பிக்கும் போது தான் நீங்கள் ஓட்டை பிரித்தீர்கள் என்றால் சரியல்ல. அதன்பிறகு தான் நீங்கள் வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதி ஏற்கனவே கிரையம் வாங்கிவிட்டார் என்றும், ஆனால் உங்களுடைய பிரமாண வாக்குமூலத்தில் வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் கிரையம் வாங்கியுள்ளார் என்று பொய்யாக சொல்லியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. உங்கள் மாமனாரும்,

01.04.2024



அவருடைய சகோதரர் ரெங்கராஜ்வும் வாய்க்காரராக பிரித்து கொண்டார்கள் என்றும், அதற்கு விரோதமாக தற்போது பிரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. உங்களுக்கு பிரிந்த சொத்தில் தான் நீங்கள் அனுபவம் செய்து வருகிறீர்கள் என்றால் சரியல்ல. வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் முன்னுக்குமுரணாக சொல்லியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

(சாட்சி குறுக்கு விசாரணையின் போது வழக்கறிஞர் கேட்ட கேள்வி முழுமையாக வாங்கிக்கொள்ளாமல் தேவையற்ற வேறு பதில்களை கூறிவந்தார். மேற்கண்ட அவரின் செயல்பாடுகளை உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 18 விதி 12 ன் படி சாட்சி நடந்துகொள்ளும் விதம் குறித்து பதிவு செய்யப்படுகிறது.)

/உண்மை நகல்/
ஒம்/-திரு.இரா. சத்தியமூர்த்தி,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.